ICCM-2016

# PROCEEDINGS

## 3rd International Conference on Contemporary Management

"Critical Solutions for Contemporary Issues"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
28th & 29th July, 2016

Proceeding of International Conference on Contemporary Management - 2016 (ICCM-2016), pp 255 - 268

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்கள் புலப்படுத்தும் சமுதாய மதிப்புகள்

ரமணராஜா .சி

## ஆய்வுச்சுருக்கம்

பண்பாட்டின் இன்றியமையாத பகுதியாக சமுதாய மதிப்புகள் உள்ளன. சமுதாய மதிப்பு என்பது அருவப்பண்பாட்டுக் கூறுகளில் ஓரங்கமாகும். இவை குறித்த கருத்தியல் சிந்தனைகளை சமூகவியலாளர்களும் மானிடவியலாளர்களும் வழங்கியுள்ளனர். குடும்பம், திருமணம், அரசு, பொருளாதாரம், கல்வி மற்றும் சமயம் போன்ற சமூக நிறுவனங்களூடாக சமுதாய மதிப்புகளானவை செல்வாக்குச் செலுத்துவதுடன் அவற்றின் இருப்பையும் தனித்தன்மைகளையும் தீர்மானிப்பதிலும் தாக்கம் செலுத்துகின்றன. பல்லவர் காலத்தில் சைவ சமயத்தவர் மத்தியில் பேராதரவு பெற்றிருந்த பக்தி இயக்கத்தின் தலைமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த திருநாவுக்கரசு நாயனார் சமுதாய மதிப்புகளை தமது பதிகங்களிலே அழுத்தியிருப்பதனூடாக சமூக நெறிஞர் என்ற பெறுமானத்தையும் உடையவராகின்றார். இறைபெருமை பேசுவதாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும் இவரது தேவாரங்கள் எவ்வாறு சமுதாய மதிப்புகளை வலியுறுத்துகின்றனஎன்பதனை சமூகவியல் மற்றும் சமயத் தளத்தில் நின்று இவ்வாய்வு நிகழ்த்தப் பெறுகின்றது.

**திறவுச்சொற்கள்:** திருநாவுக்கரசு நாயனார், சைவம், சமுதாய மதிப்புகள், அருவப் பண்பாட்டு

## 1.அறிமுகம்

திருநாவுக்கரசு நாயனார் சைவபக்தி இயக்கத்தலைமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவர். சமய வாழ்க்கையிலும் சமுதாய அமைப்பிலும் மரபுவழிக் கலாசாரத்தைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் அதிக செல்வாக்குச்செலுத்திவருகின்ற அதே வேளை சமுதாய அமைப்பிலிருந்து பிரிக்க முடியாத சமய நிறுவனங் களாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களை மையங்களாகக் கொண்டு இச்சைவ பக்தி இயக்கம் செயற்பட்டிருந்தது. பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சமூக மற்றும் சமய மறுமலர்ச்சியில் திருக்கோயில்களின் பங்கு அளப்பரியதாகவே இருந்தது. இவ்வாறு அக்காலத்தில் முதன்மையும், சிறப்பும் பெற்றிருந்த திருக்கோயில்களை முன்னிறுத்திய நாவுக்கரசர் தமது பதிகங்களில் அருவப் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றானசமுதாய மதிப்புகளையும் அழுத்திப் பேசியிருக் கின்றார். சமுதாயம் முழுமையிலு முள்ள மக்கள் உயர்ந்தவை எவை, மதிப்பான வைஎவை எனக்கருதி அவற்றுக்கு முதன்மை கொடுத்துச் செயற்படுகின்றனரோ அவற்றை சமுதாய மதிப்புகள் உணர்த்துகின்றன எனலாம். சமுதாய மதிப்புக்களை வலியுறுத் துவதில் சமுதாயத்தில் நிலை பெற்று விட்டசமயங்களினதும் அவை சார்ந்த நிறுவனங்களினதும் வகி தன்மை அளவற்றதாகும்.

## 2. ஆய்வின் நோக்கமும் முறையியலும்

அருவப்பண்பாட்டுக் கூறுகளுள் ஓர் அங்கமான சமுதாய மதிப்புகளை

இந்துநாகரிகத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ksramanan30@gmail.com

நாவுக்கரசர் தேவாரங்களினூடாக ஆராய்தல் என்பது இவ்வாய்வின் பிரதான நோக்க மாகவுள்ளது. சமயத் தளத்தில் சமூக மதிப்புகள் வலியுறுத்தப்பட்ட யுக்திகள், அதன் பயன்படுதன்மை, அதனை வலியுறுத திக் கூறுவதற்கு நாவுக்கர சரிடமுள்ள தகுதிப்பாடுகள் என்பனவற்றைக் கண்டறிதல், என்பவ இவ்வாய்வின் உபநோக்கங்களாக உள்ளன. திருநாவுக்கரசு நாயனார் தேவாரங் களை முதனிலை மூலமாகக் கொண்டு, சமய சமூகத் தளத்தில் நிகழ்த்தப்படுவதனால் விபரித்தல், பகுப்பாய்வு செய்தல், வரலாற்றி யல் வழி உற்றுநோக்குதல் ஆகியவற் றினூடாக இவ்வாய்வு கட்டமைக்கப் படுகின்றது.

### 3. ஆய்வின் முக்கியத்துவம்

சைவநாயன்மார்களை சமய வாதிக ளாகவும், அவர்களது படைப்பாக்கங்களை சமயப் பொருண்மைகளோடும் நோக்குவது ஆய்வுலகில் இருந்து வரும் மதிப்பீடாகும். இவ்வெல்லையைக் கடந்து அவர்கள் சமூக சிந்தனையாளர் அல்லது சமூகத்தை நெறிப் படுத்த முற்பட்ட சமூக நெறிஞர் என்ற பார்வையில் நோக்கப்படுவதும் அவசிய மாகும். இதனடிப்படையில் பல்லவர்கால சமூகத்தை பக்திச் செயற்பாட்டினால் மாற்றிய மைத்த சைவ பக்தியியலாளர்களுள் ஒருவரான திருநாவுக்கரசு நாயனாரை சமூக

சிந்தனையாளர் என்ற நிலையில் நோக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதனால் இவ்வாய்வு முக்கியத்து வமுடையதாக உள்ளது.

### 4. சைவபக்தி வரலாற்றில் திருநாவுக்கரசு நாயனார்

இவர் திருமுனைப்பாடி நாட்டிலே வளங்கள் நிரம்பிய திருவாமூரில் வேளாண் மைக் குடியிலே மனையறமாகிய விருந்தோம்பல் என்னும் வேள்வியில் சிறந்த புகழனார் மாதினியார் ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தார். மருணீக்கியார் என்பது இவரின் இயற்பெயர். இவரது வாழ்வியல் முறைமையும் தேவார இலக்கியப் பனுவல்களும் இற்றைவரை தனிச்சிறப்பும் முதன்மையும் பெற்றுவிளங்குவதற்கு 'திலகவதியார்' என்னும் பெண் ஆளுமையே அடியூற்றாய் அமைந்ததெனில் மறுப்பதற் கில்லை.

தமிழ்நாட்டுச்சமய வளர்ச்சி பற்றிய சரித்திரத்தில் திருநாவுக்கரசு நாயனார் தனித்துவ அடையாளமும் முக்கியத்துவமும் பெற்று விளங்குகின்றார். தொண்டு என்பதற்கு முன்மாதிரியான ஒருவராக வாழ்ந்து, பிற சமயத்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஈதைப் படுத்தல்களை இறை நினைப்பால் இன்ப மாக்கி சிறந்த அனுபூதிமானாகத் திகழ்ந்தவர். சமய வாழ்வு, தனிமனித வாழ்வு, பொதுவாழ்வு மற்றும் அறவழிப்பட்ட வாழ்வு முதலானவற்றை இணைத்து நிற்கும் வாழ்வி யற் பேரறமாக ஆன்றோர் உரைக்கும் செம்மையான வாழ்வியலை மேற்கொண்டவர்.

தேவாரம் என்ற இலக்கிய வடிவத்தால் உயர்ந்து விளங்கும் மூவருள் திருநாவுக் கரசர் இரண்டாமவர். தேவார முதலிகள் மூவருள்ளும் திருநாவுக்கரசர், வேறுபட்ட அனுபவங்களையும் பன்முக ஆளுமை களையும் கொண்டவராக இந்து சமயப் புலத்தில் இனங்காணப்படுகின்றார். இவரது படைப்புகள் பன்னிரு திருமுறைகளில் 4ம், 5ம், 6ம் திருமுறை களாக வைப்பில் இடப்பட்டுள்ளன.

இந்நிலையில் சேக்கிழார் மருணீக்கி யாரின் வாழ்வியல் கட்டமைப்பினை கீழ்வரு மாறு வகைப்படுத்தியிருக்கின்றமை யைக் காணலாம். ஒன்று, மலதிமிரமடங்குஞ் சூரியனாய்த் தோன்றி குறுகுறு நடந்து சிற்றில் சிதைத்துச் சிறு சோறிட்டுத் தேருருட்டுஞ் செம்பதங் கடந்து மறுவொழித்த விளம்பிறைபோல் வளர்கின்றார். வளருங்கால் உடம்பெடுத்த உயிர்கள் இன்ப துன்பம் அனுபவித்தல் இயல்பேயென்றும், அதனை

யொட்டித் தன்தாய் தந்தையையும் தனது தமக்கையாரின் கணவராக வருபவரையும் இழக்க வேண்டிற்றென்றும் உணர்ந்தார். இரண்டாவது நிலையில் வயது வளர்ந்து உலக வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை அறிந்து கொள்ளும் அறிவு நிலையையடைந்தார். மூன்றாவது நிலையில் அறிவுவளர -- உலக நிலையாமையை உணர்ந்து அறவினை கைக்கொண்டு விருந் தோம்பி வினைத்திறம் பூண்டிருந்தார்.[1] இவ்வாறு ஓர் ஆன்மா பக்குவப்பட்டு வரும் நிலையைச் சோபான முறையில் விளக்கி யிருக்கக் காணலாம்.

சைவ சமயத்தவர் மத்தியில் பேராதரவு பெற்றிருந்த பக்தி இயக்கத்தின் தலைமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர் சமூக நெறிஞராகவும்விளங்கி சமுதாய மதிப்புகளை தமது பதிகங்களிலே அழுத்தி யிருக்கின்றார். சமுதாய மதிப்புகளை வலியுறுத்துவதற்காக புராணக் கதைகள் உள்ளிட்டவற்றை யுக்திகளாகக் கையாண் டுள்ளார். சமுதாயப் புலத்தில் ஏற்படும் மாற்றமும். ஒழுங்குக் குலைவும் சமூக மதிப்பு கள் மீளவும் அழுத்தப்படுவதற்கு அல்லது வலியுறுத்தப்படுவதற்குரிய புறக்காரணிகளாக உள்ளன. தனிமனிதனின் விருப்பங்களுக்கும் சமூக மதிப்புகளுக்கும் இடையேயுள்ள இசை வே சமூக அமைப்பு எனப்பெறும். தனிமனித விருப்பத்திற்கும் சமூக மதிப்பிற்கும் இடையே இடைவெளி தோன்றும் போதும் இசை வின்மை தோன்றும் போதும், பெருகும் போதும் சமூக ஒழுங்கு குறைகிறது.[2] இது திருக்கோயில் சார்ந்த மக்கள் சமூகங்களில் ஏற்படுவது இயல்பாகும். சைவ சமயமும் திருக்கோயில்களை மையப்படுத்தியதாகவே சமூகக் கட்டமைப்புக்களை உருவாக்கி வளர்த்துக் கொண்டிருந்தது. பக்தி இயக்க மும் இச்சமய நிறுவனங்களை மையப் படுத்தியே செயற்பட்டிருந்தது.

ஒரு சமூக சிந்தனையாளனின் உருவாக்கத்தில் சமூகக் காரணிகள் பல்வேறு வடிவங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. நல்லூர் ஆறுமுக நாவலரை உருவாக்கியதுயாழ்ப்பாணத்தில் நிலவிய கிறிஸ்தவ சமயச் சூழலேயாகும். அவ்வாறே சமண சமயச் சூழலும், அரசியல்

பொருளாதார மற்றும் சமூக மாற்றமும் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் முதலான பக்தியியக்கச் செயற் பாட்டாளர் களை உருவாக்கியிருந்தது. இதனடிப் படையில், திருநாவுக்கரசு நாயனார் தான் வாழ்ந்த சமூகச் சூழலில் சமூகமதிப்புகளின் அவசியத்தினை உணர்ந்து, சிதைவுற்ற அல்லது மாற்றத்தை எதிர்கொண்ட சமூகத் தில் அத்தகைய மதிப்புகள் மீளிருப்புச் செய்யப்பட வேண்டும், என்னும் நோக்கில் பக்தியை மையப்படுத்திய நிலையில் எடுத் துரைப்புச் செய்யப்பட்டுள்ள தன்மை சிறப்பான அம்சமாகும்.

**சமுதாய மதிப்புகளை நாவுக்கரசர் வலியுறுத்து வதற்கான தகுதிநிலை**

வேதாகம மறுப்பும், அதற்கெதிரான தீவிரமான செயற்பாட்டுப் போக்கும் அன்றைய சமூகப் புலத்தில் மேன்மையுற்றுக் காணப் பட்டது. இவ்வாறானதொரு வைதீகமத எதிர்ப்புச் சூழலில் அன்பு, சகோதரத்துவம், சமத்துவம், தூய இறை வழிபாடு முதலியன வற்றை வலியுறுத்திய திருநாவுக்கரசர் சமூகத்தில் சமயத்தின் அவசியத்தையும், சமய நிறுவனமான திருக்கோயில்களின் பெறுமானத்தையும் உணர்ந்து அவற்றை தெளிவுபடுத்திய சமூக நெறிஞர் என்ற தகுதி நிலையிலும் சைவபக்தி வரலாற்றில் முதன்மை பெறுகின்றார்.

இச்சிந்தனைகளை சமூகத் தளத்தில் அழுத்திக் கூறுவதற்கு அவரிடம் இருந்ததாக இனங்காணக்கூடிய பன்மைத்துவ

ஆளுமைகள் அல்லது தகுதிப் பண்புகளாக கீழ்வருவனவற்றை அவதானிக்க இயல்கிறது.

* சமயகுரவர்களுள் நீண்டகால அனுபவ வாழ்வியலைக் கொண்டிருந்தமை.

* சந்தர்ப்ப சூழலமைவினால் பிற சமயம் (சமணம்) புக்கினும் சைவம் மீண்டு சமயப்பற்றுறுதி கொண்டு சைவக் காவலனாக விளங்கியமை.

* என்கடன் பணி செய்து கிடப்பதே என்று தொண்டின் சிறப்பினை பொது வாழ்வியல் நெறியாக்கியமை.

*யாவரையும், யாவற்றையும் ஒக்கவே நோக்கும் இயல்புடைமை.

*இயற்கையை அனுசரித்து வாழ வேண்டும் என்ற நியமநியதியுடைமை.

* சாதாரண அடிமை (தாஷமார்க்கம்) என்ற உறவு முறையில் இறை முன்னிலையில் தன்னை நிலைநிறுத்தியமை.

* இறைவனைக் கண்டறிந்து இன்புற வேண்டுமென்பதில் தீராத வேட்கையுடன் விளங்கியமை.

*புறச்சமயச் சூழலை எதிர்த்துச் செயற்பட்டமை.

*தமதாளுமையால் நாடாளும் அரசனையே எதிர்த்துச் செயற்பட்டதுடன் அவனை தமது பக்தி இயக்கச் செயற்பாட்டுப் பங்காளியாக்கியமை.

*வயதில் சிறியவராக இருப்பினும் அவர்களை சிறப்புச் செய்யும் பண்புடைமை. (சம்பந்தரை பல்லக்கில் சுமந்து சென்ற நிகழ்வு இதற்குச் சான்றாகும்)

*வாழ்வியலில் பெருந்துறவு நெறியினைக் கைக்கொண்டொழுகியமை.

இவற்றினடிப்படையில் நோக்கும் போது நாவுக்கரசர் சமய மற்றும் சமுதாய மறுமலர்ச்சியாளராக விளங்கினார் என்பது புலனாகின்றது. வேதங்களை ஒப்புக் கொள்ளாத அவைதீக சமயங்களின் மேலெழுச்சியும், அச்சமயத்திற்கு இருந்த அரசியல், பொருளாதார ஆதரவுகளும், அதனால் உருவாகிய சமூக மாற்றமும் இந்து சமூகக் கட்டமைப்பில் பெருமாற்றத்தை அல்லது அச்சமய மேம்பாட்டில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தகைய பின்னணியில் மண்டிப்போன சமய சமுதாய வாழ்வியலில் கைக்கொள்ளப்பட்டு வந்த பண்பாட்டுக் கூறுகளை மீளிருப்புச் செய்ய வேண்டுமென்னும் நோக்கும், அதனை நோக்கிய திருநாவுக்கரசு நாயனாரின் செயற்பாட்டு வீரியமும் இவரை 'பக்தி நெறியாளன்' என்ற பிரக்ஞையைக் கடந்து. மேம்பாடுடைய சமுதாய உருவாக்கத்தை நோக்கி மக்களை வழிநடத்திய சமூக நெறி ஞர் அல்லது இந்து சமூகத்தில் சிறந்த பண்பாட்டுக் கட்டமைப்பை உருவாக்க முயற்சித்த சமுதாய சிந்தனையாளன் என்ற படிமானத்தையும் அளித்திருக்கின்றதென லாம்.

**பண்பாடு**

'பண்பாடு' என்னும் சொல் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருப்பதனால் இதற்கு இறுதியான விளக்கத்தையளிப்பது இயலாத தாகின்றது. ஆயினும் இச்சொல் சமுதாயத் திலுள்ள மக்களின் வாழ்வியல் முறைகளை யும், சமூகப் பழக்க வழக்கங் களின் வெளிப்பாடுகளையும் உள்ளடக்கி யுள்ளது. தலைமுறை தலைமுறையாக பெறப்பட்டு அவற்றை அறிந்த மனிதர்களின் எண்ணம், பழக்கம் ஆகியவற்றின் தொகுப்பாகவே பண் பாடு விளங்குவதாகவும் கூறுவர். இக்கருத் தமைவின் படி பண்பாடு என்பது சமுதாயம் பெற்றெடுத்த ஒரு மரபு[3] எனலாம்.

பண்பாடு என்பது ஒரு சமூக மரபுரிமை என்றும், அது தனிமனிதன் ஒருவனுக்கு சமுதாயம் அளித்த கொடை என்றும் மனித இயல் ஆய்வாளர்கள் பண்பாடு பற்றி எடுத்தாள்கின்றனர். இங்கு மக்களின் வரலாற்றில் அவர்கள் படைத்துக் கொண்ட கருவிகள், சமூகப் பழக்கங்கள், வழக்கங் கள், நம்பிக்கைகள், ஒழுக்கங்கள், கொள் கைகள் முதலியவற்றின் சாராம்சங் களைப் பண்பாடு எனப் பொது வாகக் கூறலாம்.[4] இவ்வாறு பண்பாடு பற்றியும், பண்பாட்டின்

வகைகள் பற்றியும் சமூகவியல், மானிடவியல், சமயவியல், தத்துவவியல் முதலிய பல்துறை சார்ந்தஅறிஞர்கள் விரிவான விளக்கங்களை வழங்கியுள்ளனர். இவர்களின் பன்முகமான பொருளளிக் கைகளின்படி சமுதாயமும் பண்பாடும் ஒன்றினோடொன்று இணைந்து வருபவை என்பது புலனாகும்.

**சமுதாய மதிப்புகளும் அவற்றை நிர்ணயிப்பனவும்**

பண்பாட்டின் வகைகளில் ஒன்றாகிய அருவப் பண்பாட்டின் கூறுகளில் ஒன்றாக சமுதாய மதிப்புகள் எடுத்தாளப்படுகின்றன. சமுதாய மதிப்புகளின் அடிப்படையில் பண்பாட்டை இரு நிலைகளில் வகைப்படுத்தி நோக்கலாம். ஒரு சமுதாயத்தில் வாழும்

மக்கள் எவ்வெவற்றைப் பின்பற்றி வாழ்கின்றனர் என்பதனை உண்மைப் பண்பாடும் (True culture), எவ்வெவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதனைக் கருத்துப் பண்பாடும் (Ideal culture) காட்டுவனவாகக் கருதுவர்.[5] சமயங்கள் விதித்திருக்கும் வாழ்வியலிலே ஒன்றித்திருக்கின்ற விழுமியங்களே சமுதாய மதிப்புகளாக சமூகவியலறிஞர்களால் எடுத்தாளப்படுகின்றன.இதனடிப்படையிலேயே அவர்கள் சமுதாய மதிப்புகள் குறித்து பல்வேறு விளக்கங்களை அளித்துள்ளனர்.

உயர் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எவை உயர்வானவை, எவை இழிந்தவை, எவை புனிதமானவை, எவை நகைப்பிற்குரியவை என்பதை மக்கள் கற்பித்துக் கொள்கின்றனரோ அத்தகைய அடிப்படையான உணர்வுகளை சமுதாய மதிப்புகள் உணர்த்துகின்றன.[6] பெரும்பாலான சமுதாய மதிப்புகள் பண்பாட்டுப் பூர்வமாகவே உருவாக்கப் படுகின்றன என்பர். அவை சமூக விருத்தியினை அளவிடுகை செய்வதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே, இந்து சமயப் புலத்தில் விதிக்கப்பட்டனவற்றைக் கடைப்பிடித்தலும், விலக்கப்பட்டன வற்றை கடைப்பிடியாது நீக்குதலும் அறமெனக் கட்டமைக்கப்பட்ட நிலையில், எவற்றைச் செய்ய வேண்டும்?, எவற்றைத் தவிர்க்க வேண்டும்?, கடைப்பிடிக்கத் தக்கவை யாவை?, விரும்பத்தக்கன யாவை?, விலக்கத்தக்கன யாவை? என்று அறிவுறுத்துவனவாக சமுதாய மதிப்புகள் உள்ளன எனக்கருதலாம்.

நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சமயம் என்னும் அமைப்பு அல்லது நிறுவனம் சமுதாயத்தில் நிலைபெற்றிருக்கின்றது. சமுதாயத்தில் ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களோ செல்வாக்குச் செலுத்தலாம். அத்தகைய சமயத்தின் பெயரால் விதிக்கப்பட்ட உயர்வானதும் மதிப்பானதுமான செயல்கள் யாவற்றையும் சமுதாய மதிப்புகள் குறித்து நிற்கின்றன எனலாம். சமயம் வாழ்க்கையின் அர்த்தத் தையும் விளக்கத்தையும் அளிப்பதன் மூலம் சமய முறைகள் நியமங்களையும் சமுதாய மதிப்புகளையும் புனித முடையனவாக மாற்றுகின்றன என்கின்றனர் சமூகவியலாளர்கள்.[7] சமுதாயத்திலிருந்து சமயம் என்பதனை நீக்கும் தருணத்தில் அச்சமுதாயத்தில் எஞ்சுவது காட்டுமிராண்டித் தனமாகும் என்ற விவேகானந்தரது கருத்தியல் எண்ணப்பாடு இங்கு ஆழமான அர்த்தத்தையும், புரிதலையும், சமுதாயத்தில் சமயத்தின் தேவைப்பாட்டினையும் தெளிவுபடுத்துவதாயுள்ளது. ஆகவே சமுதாயம் முழுமையிலும் உள்ள மக்கள் எவற்றுக்கு முதன்மை கொடுக்கின்றனரோ, எவற்றை விரும்புகின்றனரோ அவற்றைச் சமுதாய மதிப்புகள் குறிக்கும் எனக்கருதலாம்.

குறித்ததொரு சமுதாயம் இறுக்கமான பண்பாட்டுக் கூறுகளால் கட்டமைக்கப்பட்ட நிலையில் சில புறச்சூழல்களால் தனது கட்டமைப்பிலிருந்து வழுவும் போது மீள்தூய்மையும், மீளிருப்புக்கான முயற்சியும் செய்யப்பட வேண்டியது இன்றியமையாதது. திருநாவுக்கரசு நாயனார் புறச்சமயங்களின்

மேலாதிக்கமும், அவற்றுக்கு அரசியல், பொருளாதார மற்றும் சமூக ஆதரவுகளும் மிகுதியாகக் காணப்பட்ட சூழலில் தோன்றி வாழ்ந்தவர். இத்தகைய சூழலில் இந்து சமூகம் சார்ந்த சமூக நியதிகள், மதிப்புகள், பண்பாட்டுப் பேணல்கள் என்பன காக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையில் 'என்கடன் பணி செய்து நிற்றல்' எனும் உயர் குறியிலக்கில் பணியாற்றியவர். அத்தகைய சூழலில் அச்சமூகத்தின் ஓர் அங்கத்தவராக அல்லது உறுப்பினராக விளங்கிய இவர், சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியாகவும் திகழ்ந்தார்.

சமுதாய உறுப்பினர்கள் சமுதாயத்தில் நிலவும் உயர்ந்த மதிப்புகளையும் நியமங்களையும் ஏற்கச் செய்யவும் அங்கீகரிக்கச் செய்யவும் ஏற்ற சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியாகவும் செயற்படுகின்றனர்.[8] சமுதாய வளம்படுத்தலில் அல்லது மேம்படுத்தலில் சமூக உறுப்பினர்களின் வகிதன்மை எத்தகையது என்பதனை மேற்போந்த சிந்தனை வெளிப்படுத்துவதாயுள்ளது. ஆக, புறத்திலெழும் வேறுபட்ட பல காரணிகளால் மாற்றலாகும் சமுதாயச் சூழலில் சுதேசம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை தக்கவைத்தலிலும் கையளிப்புச் செய்வதிலும் அச்சமயம் சார்ந்தவர்களின் வகிபங்கென்பது தனித்துவமுடையது. இத்தகைய சூழற்புலமே சமய அமைப்புக்களாக விளங்கும் திருக்கோயில்கள், அதனை மையப்படுத்திச் செயற்பட்ட பக்தி இயக்கம் முதலியனவற்றினூடாக திருநாவுக்காசு நாயனாரை சமுதாய மதிப்புகள் குறித்துப் பேசவைத்தது என நினைக்கத்தோன்றுகின்றது.

ஒரு பண்பாட்டின் நெறியியல் கூறுகள் எனப்படுபவை அம்மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் கூறுகளைக் குறிக்கும். சமுதாய உறுப்பினர் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும்?, எவற்றை எப்படிச் செய்ய வேண்டும்?. ஏன் அவற்றைச் செய்யக் கூடாது? போன்ற விதிமுறைகளோடு நெறியியல் கூறுகள் தொடர்புடையனவாகவுள்ளன. விழுமியங்கள், நெறி முறைகள், விதிகள், குடிவழக்குகள், வழக்கடிபாடுகள், மரபாண்மைகள், அளிப்புகள், வழக்கங்கள், பழக்கங்கள் முதலியன நெறியியல் கூறுகளுள் முதன்மையானவையாகக் கருதப்படுகின்றன.[9] விழுமியங்களும், அவற்றி லிருந்து வேறுபட்ட நெறிமுறைகளும் தனிநபர்களின் வாழ்வியல் பெறுமானத்தை அவர் வாழும் சமூகத்தில் அதிகரிக்கவும், நிலைநிறுத்தவும் உதவும். சமுதாயத்திற்குச் சமுதாயம் நெறிமுறைகள் மாறுபடும். ஆனால் விழுமியம் என்பது வலியுறுத்தும் வடிவங்களில் வேறுபட்டிருப்பினும் விடயப் பரப்பின் தன்மையில் ஒன்றுபட்டிருக்கும். இவையாவும் சமுதாய மதிப்பினை நிர்ணயிக்கும் பண்பியல்புகளாகக் காணப்படுகின்றன.

**திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களில் சமுதாய மதிப்புகள்**

சைவப்பண்பாட்டுக் கூறுகளில் மனித நடத்தைப் பண்புகளைத் தீர்மானிக்கின்ற அருவநிலைப் பண்பாடுகளில் ஒரு கூறாகிய சமுதாய மதிப்புகளை நாவுக்கரசர் இறைவனை முன்னிறுத்தி விளித்துப்பாடு பொருளாக்கி பக்திப் பின்னணியில்

விளக்கியிருக்கும் மாண்பு தனித்துவமுடையது. சமூகப் பண்பாட்டின் பன்முகமாகக் கருதப்படும் குடும்பம், தொழில், சாதி, பக்தி, தனிநபர் நடத்தைகள் சார்பாக உருவாகி வளர்ந்த வட்டாரம் சார்ந்த அல்லது பிரதேசம் சார்ந்த பன்முக அமைப்புகளை நாவுக்கரசர் பதிகங்களில் காணலாம்.

பக்தி என்பது ஓர் உணர்வு. இவ்வுணர்வு ஒருமைப்பட்டு விருத்தியடையவும், பயன் நல்கவும் ஆலயங்கள் வழிவகுக்கின்றன. சமூகப் பண்பாட்டுப் பேணலில் அல்லது வளர்ச்சியின் மையமாகத் தொழிற்படும் சமய நிறுவனங்களாக ஆலயங்களே உள்ளன. இவ்வாலயங்களானவை சமூகச் செயற்

பாட்டுத் தளங்களாக மட்டுமன்றி ஆன்மாக் களின் மலப்பீடிப்பு அகன்று இறை நினைப்பு உண்டாகவும் வழியேற்றப் படுத்துகின்றன. இச்சிந்தனையை,' ஆலயந் தானும் அரன் எனத்தொழுமே'[10] என சிவ ஞானபோதம் எடுத்தாள்கிறது. இவ்வாறு சமூகப் பண் பாட்டுப் பேணலில் திருக்கோயில் களை பன்முகச் செயற்பாட்டுக் களமாகத் திருநாவுக் கரசர் முதன்மைப்படுத்தியுள்ளமை சிறப்பான அம்சமாகும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும்மென்றே அனைத்து உயிர்களும் எண்ணம் கொள்கின்றன. இத்தகைய விருப்பம் ஈடேற வேண்டுமெனில்,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும்எம்பிரானுடைய கோயில்புக்குப் புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்கிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடிதலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி.."[11]

எனத் திருக்கோயில்களை நோக்கி மனதினைச் செலுத்துமாறு வேண்டுகோள் செய்வதனையும், திருக்கோயில் சார்ந்த செயற்பாடுகளை பொதுமைத் தொண்டு நெறியாக்கியிருக்கின்றமையும் காணத்தகும் அம்சமாகும்.

"அல்லல் என் செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநாகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே"[12]

"... சிவனுனையும் கோயில் சூழ்ந்து தாழ்ந்து
இறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"[13]

என்ற வகையில் அமைந்த பதிகங்கள் திருக்கோயில்களின் பெருமையினை வெளிப் படுத்துகின்றன என்பதனைக் காட்டிலும் சமுதாயத்தில் அவற்றின் முக்கியத்து வத்தினை வலியுறுத்தியிருக் கின்றன என்றே கருதலாம்.மேலும், ஆலயங் களில்லாத ஊர்களை அடர்ந்த காடாக (அடவி காடே) நாவுக்கரசர் சித்திரித் துள்ளமை சமூகத்தில் திருக்கோயில்களின் பெறுமானத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

சமுதாய மதிப்புகளை விளக்குவதற் காக மக்களிடையே நடைமுறையிலிருந்த புராணக் கதைகள், வட்டாரப்பற்று, மொழிப் பற்று, எளிமையான உவமைகள், முதலான வற்றைகருத்து வெளிப்பாட்டு யுக்திகளாக பயன்படுத்தியிருக் கின்றார். ஆகவே, சமய அமைப்புகளாகத் (நிறுவனங்கள்) திகழும் திருக்கோயில்கள் சமய, சமுதாய மதிப்பு களை பிரதிபலிப்பதில் செல்வாக்குச் செலுத்துவதுடன் அவற்றைப் பேணிக் காப்பதிலும் பெரும் பங்காற்றி வந்திருக் கின்றன.

இதனடிப்படையில் இறை பெருமை களைப் போற்றுதல், தன்னனுபவங்களை எடுத்துரைத்தல், உலகியல் நிலைகளைக் கூறுதல், திருத்தலப் பெருமைகளை எடுத்துரைத்தல் முதலான இடங்களில் சமுதாய மதிப்புகள் திருநாவுக்கரசு நாயனாரால் அழுத்திப் பேசப்பட்டுள்ளன. இவ்வகையில், அன்புடைமை, கொடையளித் தல், இனியன கூறல், பணிவுடைமை, பிழை பொறுத்தல், பொறையுடைமை, மனத்திட்பம், கடமை தவறாமை, சமூக சமத்துவம், அகங்காரம் கொள்ளாமை, காமமின்மை, விருந்தோம்பல், வழக்கங்கள் முதலான சமுதாய மதிப்புகள் பலவற்றை திருநாவுக் கரசர் தமது பதிகங்களில் வெளிப்படுத் தியுள்ளமையை இனங்கான முடிகிறது.

மனிதனை 'மனிதன்' என்ற பொருண் மைக்கேற்ப வாழச் செய்வது அன்புடைமை என்ற உயரிய பண்பாகும். தனிமனி

தனிடையே தோன்றி வளரும் இவ்வியல்பு சமய, சமுதாய ஒற்றுமைக்கு அடியூற்றாக அமைந்துவிடுகின்றது. இரு நபர்களிடையே, குழுக்களிடையே, சமூகங்களிடையே நல்லி ணக்கம் தோன்றி வளர்ச்சியடைவதற்கு அன்பு அடிப்படைத் தேவையாகின்றது. அன்பின் முகிழ்ப்பே பக்தியாக விரிவடை கிறது. அனைத்துப் பண்புகளும் மனிதனிடம் இருப்புக் கொள்ளுதலில் அன்பின் வகிபாகம் அளவற்றது. அனைத்துக்கும் அடிப்படையான அன்பு தான் சிவம் என்று திருமூலர் சுட்டு ணர்த்திய நிலையில், அறமும் அறத்துக்கு அடிப்படையாகிய அன்பும் ஆகிய பண்புகள் செறிந்த மெய்மைப் பொருளாக இறைவனைச் சுட்டுவதற்கு திருநாவுக்கரசர் "தயா மூலதன்மம்" என்ற சொற்றொடரை பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை,

"தயாமூல தன்மமென்னும் தத்துவத் தின் வழிநின்று

தாழ்ந்தோர்க் கெல்லாம் நலங்கொடுக் கும் நம்பியை"[14]

"தயாமூல தன்மவழி எனக்கு நல்கி

மனம் திருத்தும் மழபாடி வயிரத் தூணே"[15]

என அவர் எடுத்தாண்டிருக்கின்றார். மாணிக்கவாசகரும் 'தயவான தத்துவன்'[16] என்று இறைவனைச் சுட்டியிருக்கக் காணலாம்.

இட்டம் (விருப்பம்) என்பது அன்பினால் வருவது. இதுவே 'இணக்கம்' ஏற்பட வழிசமைக்கின்றது. 'மனிதன் தன்னுடைய சுற்றுப்புறச் சூழலுடன் இசைந்து போதலே இணக்கம்' என்கிறார் மெக்ஈவர். மனித சமுதாயத்தில் இருவரிடையே அல்லது இரு பிரிவினரிடையே ஏற்படும் பூசலுக்கு விரை விலோ அல்லது காலங்கடந்தோ ஓர் உடன்பாடு (Compromise) ஏற்படுதல் இயல் பானதே. இதனையே சமூகவியலறிஞர்கள் இணக்கம் என்று குறிப்பிடுகின்றனர். பிணக்கின் அடிப்படையில் தான் இணக்கம் ஏற்பட முடியும் என்பதும், சமரசம் (Conciliation), நடுவர் தீர்ப்பு (Arbitation)

ஆகியவற்றுடன் இணக்கம் தொடர் புடையதென்பதும் அவர்களின் கருத்தாகும். இத்தகைய இணக்கத்தை ஏற்றுக் கொள்வதும் தவிர்ப்பதும் அவரவர் பண்பாட்டைப் பொறுத்தே அமைகிறதென ஆக்பனும் (Ogburn), நிம்காபு (Nimkoff) என்பவரும் குறிப்பிடுகின்றனர். ஆகவே சமூகத்தில் அதிகம் வலியுறுத்தப்படுகின்ற 'இணக்கம்' என்பதற்கு அடிப்படையாக அன்பு அமைகிறது என்பதும் இதனைத் தவிர்க்கும் சந்தர்ப்பங்களில் சமூகம் பல சிக்கல்கள், முரண்நிலைகளுக்கு உள்ளாக நேரிடும் என்பதும் யதார்த்தமாகும்.

"...அன்புடைத் தொண்டர்க்கு அமுதரும்பி

இன்னல் களைவன இன்னம் பரான் தன் இணையடியே"[17]

"இட்டமாய் இருப்போருக்கு இடரில்லையே"[18]

என்று எடுத்தாள்வதன் மூலம் இடர்களைவதில் அன்பு நெறியின் அவசியத்தினை வலியுறுத்தியிருக்கக் காண லாம். இறையடியவர்களின் இன்னாப் புக்கள் யாவும் இறைவன் மீதுள்ள அன்பினால் களையப்படுமென்பதே நாவுக்கரசரின் அனுபவம் சார்ந்த கருத்தியலாகும். இந்த வகையில் அன்பனே, அன்பனை, நசையா னை, களிற்றினை உரித்த எங்கள் அன்பனை எனஇறைவனை பல்வேறு இடங்களில் விளித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மனித நேயப்பண்புகளை வலியுறுத் துவனவாகவுள்ளசமுதாய மதிப்புகளில் கொடை அளிப்புகள் சுட்டித்துக் கூறும் வகை யில் சிறப்புப் பெறுகின்றன. கொடை என்பது சொத்துரிமை மாற்றங்களில் ஒரு வகையாக

எடுத்தாளப்படும் நிலையில், மறுபயனின்றி செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதில் கொடை அளிப்பவர், பெறுநர் ஆகியோர் தொடர்புறுகின்றனர். கொடை என்பது அதனை அளிப்பவரால் மனமுவந்த விருப்பத் துடன் கொடுக்கப்படல் வேண்டும். பிறரது தூண்டுதலோ, பயமுறுத்தலோ, வற்புறுத் தலோ இன்றி தன்னிச்சையுடன் வழங்கப் படுதல் வேண்டும்.

பொருளாதார நிலையில் யாவரும் ஒரே நிலையில் காணப்படுவதில்லை. வறுமை உற் றோரை செல்வந்தநிலையிலுள்ளோர் கொடை யளித்து வாழ்வளித்தல் வேண்டும். இது சிறந்த மனிதநேயப் பண்பாகும்.

"இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங் கள் வைத்தார்"[19]

என கொடை அளித்தல் பயனும், கொடை அளியாமையின் கேடும் திருநாவுக் கரசு நாயனாரால் எடுத்தாளப்பட் டிருக்கின்றது.

பக்திச் சார்புடைய இலக்கியங்களில் மட்டுமன்றி, ஏனைய பிற இலக்கியங்களிலும் ஈதல் என்பது தலையாய அறமாக எடுத்தாளப் பட்டிருக்கின்றது. 'ஈபவர்க்கு அருளுண்டு' என்றும், 'கரவார் கருநரகங்கள் சேர்வார்' என்றும் நாவுக்கரசரால் கூறப்பட்ட சிந்தனைகள், 'ஈபவர்க்கு புகழுண்டு'[20] என்றும் கரவு கொள்வோர் நிலை நினைத்தற்கு உள்ளம் கவலையுறும்'[21] என்றும் வள்ளு வரால் எடுத்தாளப்பட்டிருக்கக் காணலாம். மேலும், இறைவன் கரவுடையார் நினைப்புக்கு அரியவனாகவும்,

கரவாதவரிடத்து விரவுவோனாகவும் உள்ளான் எனுங்கருத்தினை,

"கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக்
கரவார்பால் விரவாடும் பெருமானை"[22]

என எடுத்தாள்வதன் மூலம் வெளிப் படுத்தியிருக்கின்றார்.

மனிதர்கள் தங்களுடைய உரிமை களைப் பொறுத்தவரையில் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் பிறந்து தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகின்றனர், என பிரான்சு நாட்டின் தேசிய சட்டமன்றம் கி.பி 1789ல் வெளியிட்ட மனித உரிமை அறிக்கையில் (Declaration to the right to man) குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதர்கள் யாவரும் சமமான உரிமைகளை உடையவர்களென்ற உடன் பாட்டு வகையான பொருளையும், மனிதர்களிடையே தனிச்சலுகைகள் இல்லை என்ற எதிர் மறையான நிலையையும் சமத்துவம் என்ற கொள்கை காட்டுகிறது. பண்டைய இந்திய சமுதாயத்தில் நால்வர்ண வகுப்பு கட்டமைக் கப்பட்டிருந்தது. இவர்களி டையே சில வகுப்பாளர்கள் தனிப்பட்ட உரிமைகள் பலவற்றைப் பெற்றி ருந்தனர். இந்த உரிமைகளின் அடிப்படையில் உயர் வகுப்பாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே சமத்துவமின்மை காணப்பட்டதன் விளைவாக சாதாரண மக்கள் உயர்வகுப் பாளர்கள் பெற்றிருந்த சலுகைகளை அல்லது தனிப்பட்ட உரிமைகளை நீக்குவ தற்காக கிளர்ச்சிகள் செய்தனர். இத்தகைய கிளர்ச்சிகளுக்கு பக்திநெறியாளர்களின் சமூகக் கண்ணோட்டம் சார்ந்த பங்களிப் புகளும் ஆதரவுகளும் குறிப்பிடத்தக்க வகை யில் அமைந்திருந்தன. சமுதாய உறுப்பினர் களாகவும் செயலியாகவும் விளங்கும் இந்நெறியாளர்கள் அத்தகைய கிளர்ச்சி களுக்கு தலைமை தாங்குவதிலோ, ஆதர வளிப்பதிலோ வியப்பில்லை.

சமுதாயத்தில் நிலவும் சமத்துவமற்ற நிலை சமுதாயக் கட்டமைப்பில் மாறுப்பட்ட சமூக நோய்கள் ஏற்பட வழிவகுக்கும். இத்தகையதான சமத்துவமற்ற நிலையே சமத்துவம் பற்றிப் பேசுவதற்கும் வலியுறுத்து

வதற்குமான சூழலைத் தோற்றுவித்திருந்தது. அச்சூழலை பல்லவர் கால பக்தி இயக்கத்தி னரும் எதிர்கொண்டிருந்தனர். இற்றைக்குப் பதின்னான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பதா கவே 'சமூக சமத்துவத்தின் அவசியப் பாட்டினை உணர்ந்துசெயற்பட்ட சமூக சிந்தனையாளராக நாவுக்கரசரை நோக்க முடிகிறது. இவர் சமத்துவம் பேணலில் பின் னிற்பவர்களை கண்டித்தும், அவற்றைப் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தியும் செயற்பட்ட சமூகச் செயலியாகவும் காணப் பட்டார்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்"[23]
என்றும்,
"... ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர்நாம் வணங்கும் கடவுளாரே"[24]

என்றும் அமைந்த அவரது பாடல்கள் மேற்போந்த கருத்தியல் சிந்தனைகளை வலியுறுத்துவனவாகக் காணப்படுகின்றன.

இங்கு நிலையான பக்திச் செல்வம் பெறாது, நிலையற்ற உலகம் அனைத்தையும் பெற்றாலும் அவ்வுலகச் செல்வத்தை ஒரு பொருளாக நினைக்க மாட்டோம் எனும் கருத்தினை அவர் தெளிவுபடுத்தியிருக்கக் காணலாம்.

உயிர்களின் அறிவினை மறைத்து, 'நான்', 'எனது' என்னும் முனைப்பை உண்டு பண்ணுவது ஆணவ மலமேயாகும். ஒருவரிடத்திலே ஏற்படும் அகங்கார முனைப்பு சமுதாய உறவு நிலையில் விரிசல் நிலையி னைத் தோற்றுவிக்கும். இந்துசமயச் சார்பிலக் கியங்கள் யாவும் ஆணவத்தினால் உண்டா கும் இன்னாப்புக்களை பலதிறத் தாலும் விளக்கியிருக்கின்றன. ஆணவத்தின் முனைப் புக்களை படிப்பினைகளூடாக எடுத்துக்காட்டி அதனைத் தவிர்ப்பது உடலுள மேம்பாட் டிற்கும், தனிமனித விருத்திக்கும், சமூக ஒருங்கமைவிற்கும் துணையாகும் என்ற அடிப் படையில் கருத்துக் களை அறிவுரைகளாக வழங்கியுள்ளன. சமூக இடைவினைச் செயற்பாங்கில் ஆணவத்தின் வகிதிறன் அதிகமுண்டு. சமூக இடைவினையின் காரண மாகவே சமூக உறவுகள் முகிழ்க்கின்றன. இந்தச் சமூக உறவுகளின் பின்னணியில் தான் சமூகம் தோன்றி வளர்கிறது. இயங்கு கிறது. சமூகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் மட்டுமன்றி பண்பாடு வளரவும் பரவிப்படரவும் ஒவ்வொரு தலைமுறையாகத் தாண்டி நிலைத்து நிற்கவும் சமூக இடைவினை காரணமாக அமைகிறது என்பர்.

ஆணவம் கொள்வதனால் சமூக இடைவினையில் பிரித்து வைக்கும் செயற்பாங்குகளான போட்டி (Competition), பூசல் (Conflict) முதலியன தோன்றி சமூக உறவுகள் சிதைவுறு நிலையடையும். இஃதன்றி ஆணவம் இன்மையினால் சமூக இடைவினையில் இணைத்து வைக்கும் செயற்பாங்குகளான கூட்டுறவு, (Co-operation), இணங்குதல் (Accommodation), தன்மயமாதல் (Assimilation) ஆகியன தனி மனித மற்றும் சமூக ஒற்றுமை மேம்பாட டையவும் அடிப்படையாக அமைகின்றன. அப்பரடிகள் ஆணவ முனைப்பினால் உண்டாகும் தீங்கினையும், இழி நிலையை யும் உயிர்களின் நெஞ்சை விளித்து அறி வுறுத்துகின்றார். இதனை,

"அனைத்துலகும் ஆளலாமென்று பேசும்
ஆங்கா ரம்தவிர் நெஞ்சே"[25]

"நானென்ற ஆணவத்தால் விழுங் கப்பட்டு
நல்லறிவு சற்றுமின்றி நலிந்தேன் தன்னைத்
தானொன்று நல்லருளின் வடிவு

கொண்டு

தாண்டவத்தா லாண்டருளும் தந்தை தன்னை.."[26]

என்றவகையில் ஆணவம் கொள்ளு தலின் தீங்கு எடுத்தாளப்பட்டிருப் பதனைக் காணலாம். ஆணவம் கொள்ளாமை என்னும் சமுதாய மதிப்பு நிலையானது சமூக மலர்ச்சியையும், சிதைவுறாத் தன்மையை யும், ஒருங்கிணைந்த செயற்பாட்டினையும் தீர்மானிப்பதில் இன்றியமையாப் பங்கினை வகிக்கின்றது. ஆக, மக்கள் தம் அன்றாட வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டிய சமூக மதிப்புக்களில் ஒன்றாக அகங்காரமின்மை வலியுறுத்தப்பட்டிருக்கக் காணலாம்.

துன்பத்திற்கு நிலைக்களமாக அமை யும் பிறவிகளினின்று நீங்கி இன்ப நிலையினை அடைவதே உயிர்களின் குறியிலக்காகும். இந்த இன்பநிலை இறைபணியினால் கிடைப்பதாகும். பணி, கடமை எனும் சொற்கள் பொருட்தன்மை யினால் வேறுடைத் தவையன்று. இறைபணி யன்றி இன்பநிலைக்கு வேறொரு வழியும் இல்லை என்பதனை அப்பர் மிகத் தெளிவாக அதேவேளை உறுதியாக விளக்கியிருக் கின்றார்.

சமூகப் பிராணிகளாக வாழும் மக்கள் பொருளாதாரம், அரசியல் உள்ளிட்ட புறச்சூழல்களால் எத்தகைய இடர்கள் நேரிடினும் தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளி லிருந்து தள்ளி அமைதலாகாது. கடமை எனும் 'உரியபணி' மிகவுயர்ந்த சமுதாய மதிப்பாகவே வலியுறுத்தப்படுகின்றது. கணம்புல்லர், இயற்பகை நாயனார், இளை யான் குடிமாறநாயனார், பூசலார் நாய னார், அரிவாட்ட நாயனார், அப்பூதியடிகள், சிறுத் தொண்டர் முதலிய அருளாளர்களின் கடமை தவறாப் பண்பினை பெரியபுராணம் பல்வேறு நிகழ்வுகளினூடாக எடுத்துக் காட்டுகின்றது.

"தன் கடன் பணி அடியவனைத் தாங்குதல்

என் கடன் பணி செய்து கிடப்பதே"[27]

என்பது நாவுக்கரசரின் பணிக்கூற்று. இதிலே தன்பணி என்ன?, இறைபணி என்ன? என்பன நாவுக்கரசரால் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

செயலானது மனச்செயல் (மானசீகம்), உடற்செயல் (காயிகம்), வாய்ச்செயல் (வாசிகம்) என மூவகைப்படும். திருநாவுக் கரசர் திரு அங்கமாலை என்னும் திருப்பதிகத்தில் மனித உறுப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளித்து "தலையே நீவணங்காய்..."[28], "கண்காள் காண்மின்களோ"[29], "செவிகாள் கேண்மின் களோ..."[30], "வாயே வாழ்த்து கண்டாய்..."[31]. "மூக்கே நீ முரலாய்..."[32], "நெஞ்சே நீ நினை யாய்..."[33], "கைகாள் கூப்பித் தொழீர்..."[34], "கால்களாற் பயனென்..."[35] என உடலுறுப்பு களால் இறைவனை நோக்கிச் செய்யப்படு கின்ற செயற்பாடுகளை கட்டளைத் திருக்கின்றார். அப்பரின் இத்தகைய சிந்த னைகள் ஆழ்ந்த இறைபற்றின் வெளிப் படுத்தல் களாகக் காணப்படினும் இவற்றி னூடாக கடமை தவறாமை எனும் சமுதாய மதிப்பு அழுத்தப்பட்டிருக்கின்றன எனக் கருதலாம்.

சமுதாயத்தில் நல்லுறவும் நல்லிணக் கமும் ஏற்பட தொடர்பாடல் அவசியமாகும். குறிப்பாக இத்தொடர்பாடல் என்பதனூடாக 'இனியன கூறல்' எனும் சமூக மதிப்பு வலி யுறுத்தப்படுகிறது. "வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார் தம்மை யெல்லாம்..."[36] என இனியன கூறல் என்ற பண்பு அப்பரடிகளால் விளக்கப்பட்டிருக்கின்றது. மனத்துக் கண் மாசிலன் ஆதல் என்பது அனைத்து அறத்துக்கும் அடிப்படையாகின்றது. இறை வனைப் பற்றுதலுக்கு மட்டுமன்றி தனிமனித மற்றும் சமுதாய மேம்பாட்டுக்கும் மனமாசற்ற பண்பு அல்லது மனத்தூய்மை அவசிய மாகின்றது. உள்ளத் தனையதுயர்வு என வள்ளுவர் எடுத்தாள்வதும் இதனையே யாகும். அப்பரும்,

'நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே"[37] என்று குறிப்பிட்டிருக்கின்றார். திருமூலர் மலமாசு டையவர்களை கலதிகள், பாதகர், பொய்ப் பாதகர் எனக் கடிந்துரைத் திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சிற்றறிவுடைய உயிர்கள் தமது அறியாமையினால் எண்ணற்ற தவறுகளைச் செய்கின்றன. ஒருவர் செய்யும் தவறான அல்லது பிழையான செயலை பிறர் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஒருவரின் பிழையினை இன்னொருவர் மிகையாக எடுத்துக் கொள்வதன் மூலம் அவர்களுக்கிடையே பகைப்புலம் உருவாகக்கூடும். இதனைத் தவிர்த்து விடும் பட்சத்தில் நல்லிணக்கம் உருவாகும். அப்பரடிகள் பிழைபொறுக்கும் மாண்பினை,

"பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றோ."[38]

"பிழைத்ததெலாம் பொறுத்தருள் செய் பெரியோய்"[39]

"பிழை எலாம் நீக்கி ஆள்வார்"[40]

"உன்பால் அன்பர் பிழை பொறுத்தி என்பதுவும் பெரியோய்

நின்றன் கடனன்றே பேரருள் உன் பாலதன்றே"[41]

என எடுத்தாண்டிருக்கின்றார். சமண சமயம் புகுந்திருந்த நாவுக்கரசர் சைவத்திற்கு மீண்டு சைவனாக மாறிய சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட மனக்குற்றத்தினால் இறைவனை நோக்கி தன்பிழை பொறுக்குமாறு வேண்டியிருப்பதாக நினைக்கத் தோன்றினும் இங்கு அச்செயற்பாட்டினை உயர்ந்த சமூக மதிப்பாகவே கொள்ள முடிகிறது.

சமூகத்தில் நலம் பயக்கும் செயல்களின் உருவாக்கத்தில் மனவைராக்கியம் அல்லது மனத்திட்பம் என்பதும் முக்கிய இடம் வகிக்கின்றது. சமூக மேம்பாட்டிற்கு ஒவ்வாதனவற்றை எதிர்த்துச் செயற்படுவதற்கு இம்மனோநிலை அவசியமாகும். சித்தர்களின் வேதஎதிர்ப்பு, வேதியர் எதிர்ப்பு, நிறுவன எதிர்ப்பு என்பவற்றிலும் அவர்களின் சமூகக் கிளர்ச்சியிலும் மனத்திட்பம் அடிப்படையாயிற்று. அப்பரடிகளும் தம தாளுமையினால்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

நரகத்தி லிடர்படோம் நடலை யில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்

இன்பமே எந்நாளும் துன்பமில்லை..."[42]

என்று நாடாளும் மன்னனையே எதிர்த்துச் செயற்பட்டிருந்ததுடன் அம்மன்னனை தனது பக்தி இயக்கச் செயற்பாட்டிற்கும் பங்காளனாக்கிய அவரது ஆளுமை விருத்திக்கு மனவைராக்கியம் அடிப்படையாக அமைந்தது எனலாம். மேலும், குறியிலக்கினை நோக்கிய பயணத்தில் இடைவிடாத முயற்சியும், செயலும் அவசியம் என்பதனைநாவுக்கரசர் கயிலைக் காட்சியைக் காணமுற்பட்ட சந்தர்ப்பத்திலும் அவதானிக்க முடிந்தது. இதனைச் சேக்கிழார் பலதிறத்தினால் வெளிப்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக வழிகாட்டலில் பெரியோர்களின் வகிதன்மை எத்தகைய தென்பதும், வயதிற் சிறியோர் அறிவுடைய கருத்துக்களைக் கூறின் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் சமூக மதிப்பின் பாற்பட்டனவேயாகும். நாவுக்கரசருடன் தங்கியிருந்த சம்பந்தர் பாண்டியநாடு செல்ல வேண்டியேற்பட்ட

சூழமைவில் நாவுக்கரசர் சில காரணங்களைக் கூறி தடுத்து நிறுத்த முற்பட்டமையும், சம்பந்தர் மறுகாரணங்கள் கூறி போக வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த போது நாவுக்கரசர அதனை ஏற்றுக் கொண்டமையும் மேற்போந்த கருத்தியல் சிந்தனைகளின் செயற்பாட்டு வடிவங்களே எனலாம்.

மனித வாழ்க்கையின் குறியிலக்கை திரைகடலோடிப் புரியும் வணிகத்தையும், விழுமியத் தொழிலாகிய உழவுத்தொழிலையும் உருவகமாக்கி விளக்கியிருக்கின்றார்.

"மனம் எனும் தோணிபற்றி மதி எனும் கோலை யூன்றிச்
சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது
மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது அறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே"[43]

"மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மை உள்நோக்கிக் கண்டுதக வென்னும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகிற்சிவகதி விளையும் அன்றே"[44]

என அமைந்த பாடல்களில் இறைச்சிந்தனை என்ற குறிக்கோளுடன் வாழ்வதே உண்மையான வாழ்வு என்று தெளிவுபடுத்தியுள்ளார். இரண்டாம் பாடலில்

உள்ளமாகிய வயலில் சத்தியம் - உழவு, விருப்பம் அல்லது அன்பு - விதை, பொய்மை - களை, பொறுமை - நீர்ப் பாசனம், தகவு அல்லது தர்மம் - வேலியிடல் என்ற வகையில் சிறந்த உருவகத்தினூடாக செம்மையான நெறி நிற்பதனால் சிவகதி எனும் மேலான பயன்விளையும் என எடுத்தாண்டிருப்பது நோக்குதற்குரியது.

கடவுள் வழிபாடென்பதும் ஒருவரின் சமுதாய மதிப்பை எடுத்துக்காட்டும் செயல்களாகும். எண்வகை மலர்கள் கொண்டு இறைவனை வழிபாடாற்றுதல் வேண்டும் என்ற கருத்தினை திருவதிகைத் திருப்பதிகத்தில்,

"எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்டலரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன் கலந் தன்ன கெடிலவீ
ரட்டனாரடி சேருமவருக்கே..."[45]

என குறிப்பிட்டுள்ளார். இங்கு எண்வகை மலர்களென அன்பு, கொல்லாமை, பொறியடக்கம், வாய்மை, பொறை, அருள், அறிவு, தவம் என்பன எடுத்தாளப் பட்டுள்ளன.[46] இறைநிலை சார்ந்த தூய்மையான வழிபாடானது ஆன்ம சுத்தி, ஆன்மநல விருத்தி முதலியன ஊற்றம் பெறுவதற்கு அடிப்படையாகின்றது என்பதனை விளக்குவதற்காகவே எண்வகைப் பண்புகளை எண்வகை மலர்களாக எடுத்தாண்டிருக்கின்றார் எனலாம்.

நீதி என்பது சிறந்த ஒரு சமுதாய மதிப்பாகவே உள்ளது. அறச்சார்புச் சிந்தனைகளை விளக்கும் நூல்கள் யாவும் நீதி என்பதனை இன்றியமையாத ஒன்றாகவே வலியுறுத்தியிருக்கின்றன. நாவுக்கரசரும்,

சிறந்த அறிவுடைமை எதுவெனில் நீதியால் தியானித்தலே அன்றி இறை நாமத்தை சொல்லிச் சொல்லி காலங்கழித்தலன்று என்று அறவுரை செய்திருக்கின்றார்.

"ஓதியே கழிக்கின்றீர்கள் உலகத்தீர் ஒருவன் தன்னை
நீதியால் நினைய மாட்டீர் நின்மலன் என்று சொல்வீர்"[47]

என நீதியின் அவசியத்தையும் சமுதாய மதிப்புகளில் ஒன்றாக வலியுறுத்தியிருக்கக் காணலாம்.ஆசை, சினம், வெறுப்பு, முதலிய தீயகுணங்களிலிருந்து விடுபட வேண்டுமாயின் மாசற்ற மனமானது அறம் செய்தலையே நாடவேண்டும்.

"அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச் செற்றக் குரோதம் நீக்கியுன்
திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே"[48]

என தீக்குணங்களிலிருந்து விடுபடுதலே அறிவின் பயனாகுமென்றும்,சமுதாய மதிப்பை அச் செயற்பாடு அதிகரிக்க வல்லதெனவும் நாவுக்கரசர் தெளிவுபடுத்துகின்றார்.

**5. நிறைவுரை**

இந்து சமுதாயம் உருவாக்கிய நிறுவனங்களிலே திருக்கோவில்கள் மிகப் பிரதான இடங்களாகவும். சமுதாய அமைப்பிலிருந்து பிரிக்க முடியாத நிறுவனங் களாகவும் வளர்ச்சிகண்டுள்ளன. அத்துடன் அவை சமய வாழ்க்கையிலும் சமுதாய அமைப்பிலும் மரபுவழிக் கலாசாரத்தைப் பேணுவதிலும், பாதுகாப்பதிலும் அதிக செல்வாக்கும்

செலுத்திவருகின்றன.இந்து சமுதாயத் தில் திருக்கோவில்கள் மூலமாகவே சமுதாய உறுப்பினர்கள் அறிவினையும் சமய உணர்வினையும் பெற்றுவருகின்றனர். சோழர் காலத்தில் இவ்வமைப்புகள் பேரமைப் புகளா வதற்கு சைவ நாயன்மார்களின் தலயாத் திரைகளும். தலங்களை குறித்துப் பாடிய பதிகங்களும் உரமூட்டின. திருநாவுக்கரசு நாயனாரும் திருத்தலங்களை மையப்படுத்தி பதிகங்கள் பாடிய நிலையில் சமுதாய அமைப்பின் உறுதிப்பாட்டிற்கு அவசியமான சமூக மதிப்புகளையும் இணைத்து அழுத் தியுள்ளார். அவரது தேவாரங்கள் அருவப் பண்பாட்டின் கூறுகளான சமுதாய மதிப்புக்கள் பற்றிய பல்வேறுபட்ட சிந்தனைகளை வழங்கியுள் ளன. இச்சிந்தனைகள் திருநாவுக்கரசு நாயனாரை பக்தி நெறியாளன் என்ற பிரக்ஞையைக் கடந்து சமூக நெறிஞர் என்ற படிமத்தையும் அவருக்கு அளித்துள்ள தெனலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. சிவதொண்டன், செந்தமிழ் - ஆங்கில திங்கள் வெளியீடு. (1954), இதழ். 11, ப. 234.
2. ராமையா, ச., (2012), சங்கர நாராயணசுவாமி கோயில் சமூகப் பண்பாட்டு ஆய்வு, காவ்யா வெளியீடு, சென்னை, ப. 31.
3. பாஸ்கரன், க., (1994), சமூகத் தத்துவம், தத்துவமையம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், ப. 83.
4. தட்சணாமூர்த்தி, அ., (2011), தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு,சென்னை,ப. 23.
5. ஈசுவரப்பிள்ளை, தா.,(2008), பண்பாட்டு நோக்கில் திருமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப. 17.
6. மேலது, ப. 17.
7. மேலது, ப. 17.
8. மேலது, ப. 18.
9. ராமையா, ச., மு. கு.நூ, ப. 130.
10. சிவஞான போதம், சூத்திரம். 12.
11. அப்பர் தேவாரம், 6.31.3.
12. மேலது, 5.1.4.
13. மேலது, 4.23இ8.
14. மேலது, 6.20.6.
15. மேலது, 6.40.6.
16. சிவபுராணம், வரி.62.
17. அப்பர் தேவாரம், 5.40.3.
18. மேலது, 5.75.5.
19. மேலது, 4.30.10.
20. குறள்.232.
21. குறள்
22. அப்பர் தேவாரம், 4.7.1.
23. மேலது, 5.60.3.
24. மேலது, 6.95.9.
25. மேலது, 5.54.8.
26. மேலது, 6.38.6.
27. மேலது, 5.19.9.
28. மேலது, 4.9.1.
29. மேலது, 4.9.2.
30. மேலது, 4.9.3.
31. மேலது, 4.9.5.
32. மேலது, 4.9.4.
33. மேலது,4.9.6.
34. மேலது, 4.9.7.
35. மேலது, 4.9.9.
36. மேலது, 4.61.7.
37. மேலது, 4.23.9.
38. மேலது, 6.95.8.
39. மேலது, 4.90.6.
40. மேலது, 5.49.8.
41. மேலது, 6.25.7.
42. மேலது, 6.98.1.
43. மேலது, 4.46.2.
44. மேலது,4.76.2.
45. மேலது, 4.54.1.
46. வெள்ளைவாரணன், க., (2008), பன்னிருதிருமுறை வரலாறு, (முதல் ஏழு திருமுறைகள்), சாரதா பதிப்பகம், சென்னை,ப. 517.
47. அப்பர் தேவாரம், 4.41.9.
48. மேலது, 4.20.8.